# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி 2024 மீனம் (மார்ச் — I) விலை உருபா 1·50 (இதழ் எண்: 162)


## பார்ப்பனக் கொடுநெறி அரசால் அடக்குமுறை 'தடா' சட்டத்தில் சிறைப் படுத்தப்பட்டுள்ள

# பாவலரேறு அவர்களுக்கு சிறைக்காவல் நீட்டிப்பு!

## வழக்கு மன்றத்தில் வழக்காடினார்!

'தடா' என்னும் அடக்குமுறைச் சட்டத்தின் கீழ் கருத்துரிமை, எழுத்துரிமையைப் பறிக்கும் முகமாக பார்ப்பனக் கொடுநெறி, இந்துப் பெருமத வெறி, ஆரியக் கௌடிலி செயலலிதா அரசால் சிறை வைக்கப்பட்டுள்ள நம், கழக நிறுவனர் பாவலரேறு அவர்களின் சிறைவைப்பு முதல் ஆணைக் காலம் 17-3 93 இல் முடிவடைந்தது. ஆகவே அன்று அவர் மீண்டும் காவல்துறையினரால் சிறையிலிருந்து, 'தடா' தனி வழக்குமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

ஐயா அவர்கள் வழக்குமன்றக் கூண்டில் நின்று தந்நிலை விளக்கமளிக்கும் வகையில் வழக்கை எதிர்த்து அரைமணி நேரம் கருத்துப் போர் நடத்தினார். தாம் மொழி இன, நாட்டு உரிமைகளுக்காகப் போராடி வருவதையும் தமிழுக்குத் தாம் செய்து வருகிற ஏற்றத்தைக் குலைக்கும் வகையில் தம் நூல்கள் வெளிவருவதைத் தடை செய்யவே அரசு இவ்வடக்குமுறையை ஏவியிருக்கிறது என்றும் எடுத்துரைத்தார். தென்மொழி, தமிழ்நிலம் ஏடுகள் வெளிவந்துவிடாதபடி, காவல் துறையினர் அச்சகப் பணியாளர்களை அச்சுறுத்துவதையும் எடுத்துரைத்தார்.

ஐயா அவர்களின் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கருத்துரையை அரசு வழக்கறிஞர் உட்பட பல வழக்கறிஞர்களும், நடுவரும், 'எழுத்தர்களும் காவல்துறையினரும் பார்வையாளர்களும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

பிறகு நடுவர், ஐயா அவர்களின் சிறைக் காவலை 12-5-93 வரை நீட்டித்தார். அதனால் காவல் துறையினர் ஐயா அவர்களை வலுவான காவலுடன் மீண்டும் சிறைக்கு அழைத்துச் சென்றனர். நம் வழக்கறிஞர் திரு. கலைமணி தொடுத்துள்ள பிணையல் மேல் முறையீட்டு வழக்கில் 17-3-93 இல் தருக்கம் நடப்பதாக இருந்தது அரசுவழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மறுநாள் தருக்கம் நடந்தது. இவ் வழக்கில் பிணையல் மீதான தீர்ப்பினை 30-3-93-இல் வழங்குவதாக நடுவர் அறிவித்துள்ளார்.

# வழக்கு மன்றத்தில் ஐயா!–சில நிகழ்ச்சிகள்

ஐயா அவர்கள் 17-3-93 அன்று 'தடா' தனி வழக்கு மன்றத்திற்கு சிறையிலிருந்து தனி மூடுந்தில் வலுவான காவலுடன் அழைத்து வரப்பட்டார். ஐயா அவர்களின் வருகையை ஒட்டி,

"தமிழ்நாட்டு உரிமை கேட்கத் தடையா?
தடா சிறையில் பெருஞ்சித்திரனுர்
17-3-93இல் வழக்கு மன்றம் வருகிறார்"

என்றபடி சுவரொட்டிகள் உ.த.மு.க. சார்பில் நகர் முழுதும் ஒட்டப்பட்டிருந்தன.

ஐயா அவர்களின் வருகையை அறிந்த உள்ளூர்,வெளியூர் தோழர்களும் தோழியரும் ஏராளமாக வழக்குமன்றத்திற்கு, முன்னதாகவே வந்து குழுமியிருந்தனர். காவலர்களின் கடுந்தன்மையால் வழக்குமன்றத்திற்குள் அன்பர்கள் செல்ல முடியவில்லை. ஐயா அவர்கள் வழக்குமன்றத்தில் விளக்கவுரையாற்றுவதைக் காண விரும்பிய அன்பர்களை வழக்குமன்றத்திற்குள் விடாமலும் வாயிலில் நின்று பார்க்க முடியாமலும் காவல்துறையினர் விரட்டிக்கொண்டேயிருந்தனர்.

விளக்கவுரையாற்றிய ஐயா அவர்களுக்கு குடிக்க நீர் கூட கொடுக்க விடவில்லை காவல்துறையினர். நம் வழக்கறிஞர் தலையிட வேண்டி வந்தது.ஐயா அவர்களுக்குப் பகல்உணவு கொடுக்க அவர் தம் குடும்பத்தினர் வழக்கறிஞர் வழி நடுவரிடம் இசைவு பெற்றனர். ஆனல் 'பழக இனிமை'என்று காவல் நிலையப் பலகையில் மட்டும் எழுதி வைத்துள்ள காவல்துறையினர் பகல் உணவு தருவதற்கு நடுவரின் இசைவு கிடைத்தும் மறுத்து ஐயா அவர்களை மீண்டும் சிறைக்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

ஐயா அவர்களைக் காவல்துறையினர் வழக்குமன்றத்தை விட்டு வெளியே அழைத்து வந்து சிறைக்கு அழைத்துச் செல்லும்போது அங்குக் கூடியிருந்த நம் தோழர்களும் தோழியரும்,

"அடக்குமுறைச் சட்டங்களைத் துரத்தியடிப்போம்!
தமிழறிஞர் பெருஞ்சித்திரனரை விடுதலை செய்!
'தடா' சட்டத்தைத் தகர்த்தெறிவோம்!
காவல்துறையினரின் வன்முறையை ஒழிப்போம்!
தமிழக விடுதலைக்குத் தொடர்ந்து போராடுவோம்!"

என்றவாறு பல முழக்கங்களை உரத்து முழங்கிக் கொண்டேயிருந்தனர். அங்கிருந்த பல வழக்கு மன்றங்களிலிருந்தும் பொதுமக்களும் வழக்கறிஞர்களும் பிறரும அங்குக் கூடிவிட்டனர்.

கருத்துப் பரவுதலைத் தடுத்துவிடவேண்டும் என்று அங்கிருந்த காவல்துறையினர் தோழர்களைக் கலைந்து போகுமாறு சொன்னர்கள்.

உ.த.மு.க. பொறுப்பாளர்கள் திரு. தி.மு. அரசமாணிக்கனுர் (ஈரோடை), திரு. குமர. தன்னெளியன்(வேலூர்), திரு. மா. செ.தமிழ்மணி (மாத்தூர்) மற்றும் தமிழர் குடியரசுக் கட்சித் தலைவர் தீனன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், கரூர் நுகர்வோர் பாதுகாப்பியக்கம், தமிழ்நாடு மக்கள் இயக்கம். பாட்டாளி மக்கள் கட்சி, எண்ணூர் பைந்தமிழ்ப் பாசறை, சிங்காரவேலர் பேரவை போன்ற பல அமைப்புகளிலிருந்து தோழர்களும் தோழியரும் வழக்குமன்றத்திற்கு வருகை தந்திருந்தனர். O

# அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

பாவலரேறு அவர்கள் 'தடா' சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டுள்ளதும் தடா சட்டத்தின் கொடிய தன்மையும் அன்பர்கள் அறிந்தவையே. இதனல் அவர்தம் அளப்பரிய மொழி, இன நாட்டுப் பணிகள் தடைப்பட்டு நிற்கின்றன.

ஐயா அவர்களைப் பிணையலில் விடவும் மறுத்துள்ளனர். மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. அவரை விடுவிக்குமாறு அரசை வற்புறுத்தி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. கண்டன அறிக்கைகள் விடப்பட்டன.

அவ்வகையில் கழக அன்பர்களும் ஆர்வலர்களும் கீழே குறிப்பிடப்படுவது போல ஒரு வேண்டுகையை அஞ்சலட்டை வழியும் தொலைவரி வழியும் தமிழக முதலமைச்சருக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பொதுமக்களும் இவ்வாறு அனுப்ப அன்பர்கள் ஆவன செய்யலாம்.

**அஞ்சலட்டையில்.**

தமிழக அரசே!
தமிழறிஞர் பெருஞ்சித்திரனர் அவர்களின் தமிழ்ப் பணியைத் தடுக்காதே! உடனே அவரை விடுதலை செய்!

**தொலைவரியில்.**

Release Perunchithiranar from TADA Immediately.

**அன்பர்கள் கவனிக்க!**

ஐயா அவர்களின் வழக்குச் செலவுகளுக்குப் பங்கேற்று கழகத்தினரும் அன்பர்களும் ஆர்வலர்களும் நன்கொடை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேம்.

—அமைச்சர்.

Scanned with CamScanner

+ 'இவரின் மூளை முழுக்க தமிழ்நாட்டுப் பிரிவினை என்கிற செய்தியே அடைத்துக் கொண்டுள்ளது!'

+ 'இவரைப் பிணையலில் விட்டால் வெளிநாட்டுக்கு ஓடிவிடுவார்!'

# பாவலரேறு ஐயா – அவர்களின் பிணையலை மறுத்து அரசு வழக்கறிஞர் தருக்கம்!

கடந்த 17-3-93 அன்று ஐயா அவர்களைப் பிணையலில் விடுவதற்கான வழக்கு கேள்விக்கு வர இருந்தது. ஆனால் அரசு வழக்கறிஞர் திரு. இராமரத்தினம் 18-3-93-ஆம் நாளைக்குத் தள்ளி வைத்திட கேட்டதின்வழி அடுத்த நாளன்று பிணையலுக்கான தருக்கம் நடந்தது.

ஐயா அவர்கள் அகவையில் பெரியவர் என்றும்; அவரிடம் தனக்கு மதிப்பு உண்டென்றும் எனவே அவர் வழக்குமன்றம் வருகின்ற அதே நாளில்—அவர் முன்னிலையிலேயே அவருக்கான பிணையலைத் தான் மறுக்க—அவர் வருத்தப்பட நேரலாம். எனவேதான் மறுநாள் கேட்பு நாளை வாங்கிக் கொண்டதாக அரசு வழக்கறிஞர் தனிமையில் நம் வழக்கறிஞரிடம் கூறிக் கொண்டார்.

18-3-93 வியாழக்கிழமை பகல் பன்னிரண்டு மணி அளவிற்கு ஐயா அவர்களின் பிணை வழக்கு தருக்கத்திற்கு வந்தது. நடுவர் சௌந்திரபாண்டியன் முன்னிலையில் ஐயா அவர்களுக்காக வழக்காடிய வழக்கறிஞர் கலைமணியும், அரசு வழக்கறிஞர் இராமரத்தினமும் அழுத்தமாக தருக்கமிட்டனர்.

வழக்கறிஞர் கலைமணி பேசுகையில்—தமிழருக்கான உரிமைகள் எவ்வாறு நசுக்கப்படுகின்றன என்றும், பம்பாயில், வெங்களூரில் தமிழன் அடிப்பட்டுச் சாகும்போதெல்லாம் தமிழனை இந்தியன் என்று யாரும் ஏற்றுச் சிந்திக்காமல்—அவன் இதே நாட்டிலேயே ஏதிலியாக்கப்பட்டான் என்றும், கூர்க்க விடுதலைக்கான கருத்துகளைத் தடை செய்து, கூர்க்க விடுதலைப் போராளிகள் 'தடா'வின் கீழ்த் தளைப்படுத்தப்பட்டது தவறு என்று அந்த வழக்குமன்றம் தீர்ப்பு அளித்தது—என்றும் பலவாறும் நம் பக்கமுள்ள கருத்துகளை எடுத்துப் பேசினார்.

ஆனால்—இவற்றுக்கெல்லாம் மறுப்பு கொடுத்த அரசு வழக்கறிஞர் பேசும்போது, — இவர் (பாவலரேறு ஐயா அவர்கள்) தமிழ்மொழி அளவில் சிறந்த வல்லுநர் என்பதைத் தான் ஏற்றுக் கொண்டாலும், அவரிடம் உள்ள தமிழ்ச் சிந்தனை மொழி அளவில் மட்டும் அல்லாமல்—தமிழர் சிந்தனையாகவும் தமிழ்நாட்டுப் பிரிவினைச் சிந்தனையாகவுமே உள்ளது. அவருடைய மூளை முழுக்க தமிழ்நாட்டுப் பிரிவினைச் சிந்தனையில் அழுத்தப் பட்டுள்ளது என்றும் கூறினார். மேலும் அரசு வழக்கறிஞர் குறிப்பிடுகையில் ஐயா அவர்கள் முன்கூட்டியே தனக்கு உலகம் முழுக்கத் தொடர்பு இருப்பதாகவும், பல வெளிநாடுகள் தனக்கு முழு மதிப்புள்ளது என்றும், பலரும் பேச அழைத்துள்ளதாகவும் குறிப்பிடுகிறார்—இதன்மூலம்—இவருக்குப் பிணையல் கொடுத்துவிட்டால் அவர் வெளிநாட்டுக்கு ஓடிவிடுவார்—என்றும் குறிப்பிட்டார்.

—இப்படி அரசு வழக்கறிஞர் குறிப்பிடும் போது—நடுவர் தவிர—வழக்குமன்றத்தில் இருந்த பலரும்—அரசு வழக்கறிஞரின் இப்பேச்சைக் கேட்டு நகைத்தனர்.

தொடர்ந்து அரசு வழக்கறிஞர். ஐயா அவர்கள் ஏராளமான நூல் எழுதி இருப்பதாகவும், இப்போதுகூட பெரிய அளவில் நூல் ஏதோ எழுதிக்கொண்டிருப்பதாகவும்—அது பிழைதிருத்தி வெளியிடப்பட வேண்டுமாயின் தான் பிணையலில் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். 'தமிழ்நிலம்'—என்கிற கிழமை இதழில் எழுதப்பெறும் செய்திகளே இந்த அளவு பிரிவினைக் கருத்துகளை உள்ளடக்கி வைத்துள்ளது எனில்— அவரின் வரப் போகும் நூல்கள் எந்த அளவு கடுமையானதாக இருக்குமோ சொல்ல இயலாது—எனவே அந்த நூல்கள் வராமல் இருக்கவேண்டுமானால்—அவர் வெளியே விடப்படாமல் இருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இப்படியாக அரசு வழக்கறிஞர் பேசிய பின்னர் மீண்டும் நம் வழக்கறிஞர் திரு. கலைமணி அவர்கள்—

அவர் தமிழரின் உரிமைகளை, விடுதலையாகக் கேட்கின்ற நிலையை நீங்கள் அதற்குரிய '124A' —போன்ற வழக்குகளின் கீழ் கொண்டு வரலாம் என்றும், 'அதற்காக 'தடா'வைப் பயன் படுத்துவது முறையற்றது என்றும் குறிப்பிட்டார்.



Scanned with CamScanner

இரு பக்கக் கருத்துகளையும் தொகுத்துக் கொண்ட நடுவர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள்—வழக்கின் தீர்ப்பை 30-3-93-க்குத் தள்ளி வைத்தார்.

தமிழர், தமிழர் வாழ்வு, தமிழர் உரிமை, தமிழர் விடுதலை—என்பதெல்லாம் தொடர்ந்து பேசப்பட்டு, எழுதப்பட்டு வந்த செய்திகள். 1900-களிலிருந்தான இந்தச் சிந்தனையின் வெளிப்பாடு—இதுநாள் வரை பேசுவதே குற்றமானது என்று குறிக்கப்படவில்லை.

அதைச் செயல் வடிவமாக்கச் செய்யப்பெறும் கருவி நடவடிக்கைகளே தடுக்கப்பெற்றன.

ஆனால்—இன்றைய பார்ப்பன செயலலிதாவின் கொடுநெறி ஆட்சியில் சிந்திப்பது என்பதே தடைசெய்யப் பெற்றாலும் வியப்படைவதற்கில்லை.

தமிழர் உளமையாய் உணர்வுற்றும்,
கோழையாய்—கொள்கையை விற்றும் வாழ்கின்ற காலம் ஒழிக்கப்படுகிறவரை—தமிழின உரிமை தலைதூக்க முடியாது.

அடிமைத் தமிழினமே நம் வாழ்வுரிமைக்காகப் போராடுவோம்! O

---

# உ.த.மு.க. உடன்பிறப்புகளுக்கு ஓர் உடனடி இன்றியமையா அறிக்கை!

தமிழினியீர்!

நம் பாவலரேறு ஐயா அவர்கள் 17-3-93 அன்று வழக்குமன்றத்திற்கு அழைத்து வரப்படுகிறார் என்பதை அறிந்து அங்கு திரண்டிருந்த தோழர்களில் நானும் ஒருவன். காவல்துறையினரின் கெடுபிடி கடுமையாயிருந்தது.

வழக்குமன்றத்தில் நாங்கள் பாவலரேறு அவர்கள் ஒரு பெருவீறு கொண்ட அடலேறுவாக முழங்கக் கண்டோம். பெரியாருக்குப்பின் தமிழக விடுதலைக்கு வீறு கொண்டெழும் தலைவர் இவரே என மேலான நம்பிக்கை கொண்டோம்.

நாங்கள் அனைவரும் ஐயா அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தோம. அரசின் அடக்குமுறையை எதிர்த்தும் ஐயா அவர்களை வாழ்த்தியும் தமிழக விடுதலை குறித்தும் முழங்கினோம்.

கழக உடன்பிறப்புகளுக்கு என் மேலான ஓர் உடனடி இன்றியமையா வேண்டுகோள். இனிமேலும் நமது கழகத் தோழர்கள் வாளாவிருக்காமல் ஆங்காங்கு கூட்டங்கள் நடத்தி இந்தக் கொடுநெறி தடா ஆட்சியின் அட்டுயழிங்களை வெட்ட வெளிச்சமாக்கி அவர் திரை மறைவுக் காட்சிகளை மக்கள் மன்றத்திற்கு வெளிப்படுத்த வேண்டும். அது ஓர் ஆற்றல்மிக்கப் போராட்டமாக அமைய வேண்டும், அப்போராட்டம் இந்தக் கொடுநெறி ஆட்சிக்குச் சாவு மணி அடிக்கும் நிலையில் உருவாக வேண்டும்,

தி.மு. அரசமாணிக்கனார்,
மாநிலத் துணைச் செயலர்,
உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், சென்னை-5.

---

## தென்மொழி ப.முருகவேளின் மகன் 'தனித் தமிழ் நாடன்' மறைவு!

நீண்ட நாள் தென்மொழி அன்பரும், தென்மொழி அலுவலகம் கடலூரில் இருந்தபோதும்-அதன்பின் சென்னைக்கு மாற்றப்பட்ட போதும்-தென்மொழி அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றியுவருமாகிய **தென்மொழி** ப. முருகவேள் அவர்களின் மகன் திரு.'தனித்தமிழ்நாடன' 6-3-93 அன்று மறைவுற்ற செய்திகேட்டு மிகவும் துணுக்குற்றோம்.

நடுவண் சிறையிலிருக்கும் ஐயா அவர்களுக்கு இச்செய்தி தெரிவிக்கப் பெற்றது. ஐயா அவர்களும் தென்மொழி வட்டமும் மகனை இழந்து வருந்தும் தென்மொழி ப முருகவேள் அவர்க்கு தம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

—அமைச்சர்.

## தமிழ்நிலம வெளியீட்டு உரிமை அறிக்கை!

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956)
19-ஏ. ஆ. (வருப்பு 8-ஆம் கட்டளைப்படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | சென்னை |
| 2. காலமுறை | : | மாதம் ஒருமுறை |
| 3. அச்சிடுவோர் பெயர் | : | திருவாட்டி. மா. தாமரை |
| இனம் | : | தமிழர் |
| முகவரி | : | தென்மொழி அச்சகம் சென்னை-5 |
| 4. வெளியிடுவோர் பெயர் | : | திரு. பெருஞ்சித்திரனார் |
| இனம் | : | தமிழர் |
| முகவரி | : | தென்மொழி அச்சகம் சென்னை-5 |
| 5. ஆசிரியர் பெயர் | : | திரு. பெருஞ்சித்திரனார் |
| முகவரி | : | சென்னை-5 |
| ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும் | | திரு. பெருஞ்சித்திரனார் சென்னை-5, |

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

சென்னை 5
·3 93

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

# பாவலரேறு ஐயா அவர்களைத் 'தடா'வில் சிறைப்படுத்தி இருப்பதைக் கண்டித்து வந்த அறிக்கைகள்.

## தமிழரை ஒடுக்க மட்டும் 'தடா'வா? வடவருக்கு அது பொருந்தாதா?

எழுகதிர் - அரு. கோபாலன்.

எங்கள் தமிழ்மொழியைப் பேசுகின்ற எங்களின் உடன்பிறப்புகளை-தமிழ்த் தேசியத்தைத் தளர விடாததற்காகவே சிங்களப்பேரின வாதத்தால் அழிவுக்கு ஆளாக்கப்படும் எங்கள் அரத்தத்தின் அரத்தங்களாகிய ஈழத் தமிழர்களை நாங்கள் ஆதரிப்பது மட்டும் எப்படிக் குற்றமாகும்.

நாங்கள் ஆதரிக்காமல் விட்டால்தான் அது குற்றம். ஆம்; மாந்த நேயத்திற்கு இழைக்கப்பட்ட குற்றம். மானமுள்ளமைக்கு இழைக்கப்பட்ட குற்றம்.

அந்தக் குற்றத்திற்கு இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள தமிழ்மக்கள் ஆளாகி விடக்கூடாது என்று, கிட்டுவின் படுகொலையைக் கண்டித்து அக்கறையோடு குரல் கொடுத்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனாரையும், அவருடைய மகன் பொழிலனையும் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் மாவீரன் நெடுமாறனையும் 'தடா' சட்டத்தின் கீழ்த் தளைப்படுத்திச் சிறையில் அடைத்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கதாகும்.

இந்திய அரசு அந்தக் கடைமையிலிருந்து நழுவியதுமல்லாமல்; அக்கடமையை நிறைவேற்றிய நெடுமாறன் போன்றவர்களைத் தண்டிப்பது அறமல்ல.

அவர்களைத் 'தடா' சட்டத்தின் கீழ் தளைப் படுத்தியது தில்லியரசல்ல, தமிழக அரசுதான் எனில் அது மேலும் கடும் கண்டனத்திற்குரிய தாகும்.

"விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப் பட்டிருக்கிறது. இந் நிலையில் அதற்கு ஆதரவாகச் செயல்படுவோர் தண்டிக்கப் படுவது சரிதானே" என்பாராயின், ஆர்.எசு.எசு. விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள் ஆகியவையும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், பாரதீய சனதா கட்சிக்காரர்கள் அவற்றை ஆதரித்து வெளிப்படையாகவே பேசுகிறார்கள், செயல்படுகிறார்கள் பால்தாக்கரே தலைமையில் சிவசேனைக்காரர்கள்! அதற்காக கடும் கலவரமே நடத்துகிறார்கள். அவர்கள் ஏன் தண்டிக்கப்படவில்லை? தடா சட்டத்தின் கீழ் தளைப்படுத்தப்படவில்லை?

மேலும், இந்தியா ஒரே நாடு என்றால் எங்கும் ஒரே மாதிரியாகத்தானே நடவடிக்கை அமைந்திருக்க வேண்டும்? ஒரு கண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பது என்ன நியாயம். வலிவுடையவர்கள் பக்கம் 'தடா' பாயாது. வலுவற்றவர்கள் பக்கமே பாயும் என்றால், இது சட்டத்தின் ஆட்சி நடக்கும் நாடா? 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்னும் காடா? ஆமாம்; தடை செய்யப்பட்ட ஆர்.எசு.எசு.சை ஆதரிப்பவர்களுக்கு ஒரு நியாயம், விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்களுக்கு ஒரு நியாயம் என்றால்; இது நேர்மையற்றதல்லாது வேறென்ன?

பால்தாக்கரே, அத்துவானி, ஜோசி என்றால் சட்டம் பல்லிளிக்கும்; பெருஞ்சித்திரனார், நெடுமாறன் போன்றவர்கள் என்றால் பாயும் எனில், உலகம் சிரிக்காதா?

எனவே அவர்களை உடனே விடுதலை செய்து, அவர்கள் மீது தொடுத்துள்ள வழக்குகளைக் கைவிட்டு, இந்தியாவுக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்க வேண்டுகிறோம்.

## 'முகம்' மாமணி கண்டனம்

கே : தமிழ், தமிழன், தமிழ்நாடு என்று போராடி வரும் சிறைக்கஞ்சா சிங்கம் பெருஞ்சித்திரனாரைத் தடா சட்டத்தில் பிடித்து உள்ளே போட்டுவிட்டார்களே...

ப : பாவம், அவர்கள்! நெல்சன் மண்டேலாவின் வரலாற்றை அறியாதவர்கள்

## மக்கள் குடிஉரிமைக் கூட்டமைப்பு (பி.யு.சி.எல்) கண்டனம்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், தமிழறிஞர் பெருஞ்சித்திரனார், அவரது மகன் பொழிலன் ஆகியோர் 'தடா'வின் கீழ்த் தளைப் படுத்தப்பட்டுள்ளதை மக்கள் குடி உரிமைக் கூட்டமைப்பு(பி.யு.சி.எல்.) தமிழ்நாடு பிரிவு கண்டனம் செய்கிறது. அதேபோல திரு. சுபவீரபாண்டியன், பேராசிரியர் சரசுவதி, பேராசிரியர் கல்யாணி போன்ற கல்வியாளர்கள், அறிஞர்கள் குமுகத் தொண்டர்கள் அண்மைக் காலத்திலும் தொடர்ந்தும் தளை செய்யப்பட்டு வருவதையும் ம.உ.கூ(பி யு.சி.எல்.)கண்டனம் செய்கிறது. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டதாகவும் பிரிவினைப் போக்கைக் கொண்டிருப்பதாகவும் இவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எந்த ஓர் அரசியல் கட்சியையோ அமைப்பையோ தடை செய்வதையும் இத் தடையை திறனாய்ந்துக் கருத்துகளை வெளியிடும் உரிமையை நசுக்க அரசு முயற்சிகள் செய்வதையும் ம.உ.கூ.

# அரிமாவை அடக்கு(ம்) தடா!

தென்மொழியே! என் இளையவளே! என்றும் நீ வாழ்க! வளர்க! இப்படி எனக்கு வாழ்த்த உரிமையுண்டு— என்பதைவிட விருப்பம் உண்டு என்று பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கருவாக வளர்ந்த காலத்திற்கு முன்பே ஆசிரியரின் மனத்தில் கருவாக நீ வளர்ந்தது எனக்குத் தெரியும்! ஏனெனில் நாமிருவரும் ஒரே உணர்வில் வளர்க்கப்பட்டோம். ஆனால் உடல் நான்; உயிர் நீ! உடல் அழிந்தாலும், உயிர் அழியாது.

**மொழியையும் நாட்டையும் ஆளாமல் என் மொழியே! தென்மொழியே நீ துஞ்சமாட்டாய்! வீறுநடை போடுவாய் என்றறிவேன்.**

**"எந்தமிழ் மொழிக்கும் எந்தமிழர்க்கும்**
**வந்தஇழி வெல்லாம் வருந் துயரெல்லாம்**
**துடைத்திடச் சிறைக்குள் தொண்ணூறு ஆண்டுகள்**
**அடைத்துக் கிடக்கப் படுவேன் எனினும்**
**உளமும் உயிரும் உவந்துடன் ஒப்புவேன்!**

—என்று வீறுரை பகன்றதை என்றும் என்னுயிர் மறவாது! மறவாது! நீ விடும் மூச்சு **தமிழ், இனம், நாடு என்று ஒவ்வொரு முழக்கினிலும் சோர்வதில்லை** என்பதை யார் அறியாமற் போவர்?

இன்று கூட்டில் அடைக்கப் பட்டாலும், **கூட்டைத் திறந்ததும்,** கருங் குரலெழுப்பி **குறுநடை போடுவாய் அரிமாவே! அரிமாவை அடக்கத் 'தடா'வா? யார் போட்ட தடா?**

வடக்கே செய்யும் அழிம்புகளைக் கேட்காத தடா! உணர்வற்ற உலுத்தர்கள் போட்ட தடா! அத்துவானியையும், வாஜ்பேயையும் காப்பாற்ற (பேடிகள் பதுங்கிக் கொள்ள)வும் ஒரு சிறை! எம் இனக் காவலரை அடக்கவும் ஒரு சிறை! இது எந்த சட்ட முறை? இவற்றைக் கண்டும், காணாத எண்பது கோடி மக்கள் தலைவன் ஒரு நடிகன்; இவர்களை எல்லாம் (ஒருமைப் பாட்டை பிதற்றும்) தடா தீண்டாதா! தடாவும் தீண்டாத தலைவர்களா! தமிழகத்தில் எம் தமிழினத்தை மட்டும் அழிக்க வந்த தடா! பேசினால் தடா! எழுதினால் தடா! தடுக்கி விழுந்தால் தடா! தடா!

குடிக்க நீரின்றிக் குளத்தில் தண்ணீர் கொட்டிய மூடநம்பிக்கை கோலோச்சும் காலத்தில், பசிக்குச் சோறின்றி வசிக்க வீடின்றி வாடுகின்ற மக்களிருகையில்—

40 கோடிச் செலவில் விளையாட்டு அரங்கம் எம் இளைஞர்களைத் திசை திருப்பி, குரங்காட்டி வேலை காட்டும் அரசியிங்கு நாடாளுகையில்.

மக்களின் காவலர்கள் (Police) எம் தாய்க் குலத்தைக் கற்பழித்து வெறியாட்டம் நடத்துகையில்,

நாற்புறமும் மக்கள் தேங்க நடுவில் இங்கு தேர் அசையும் காட்சி போல், திரட்சி பெற்ற புரட்சிச் செல்வி! (புரட்சியில் புரியாத புதிர்) நாளும் உலா வரும் நேரத்தில், காவலருக்கு இருமடங்கு காசு கொடுத்து, தன் ஊளைச் சதைக்கு உதவி கேட்கும் பார்ப்பனத்தியின் பதவி இங்குக் கோயிற் பணியில் குடமுழுக்குப் போடுகையில்,

தென்மொழியே! தடாவில் அடைபட நீ 40 ஆண்டுகளாக ஆற்றிய தொண்டென்ன,

நெட்டுருவில் வெட்டுருவாய் (கட்டவுட்) தொங்கும், மக்களின் செயல்களைத் தேங்க வைத்து, வீதியில் நிற்க வைத்து, மக்களுக்குக் காட்சியாய், ஆயிரம் ஆயிரம் உந்துகளில் ஊர்ந்து வரும் உலாக் காட்சியில், புரட்சி செய்யும் தலைவியின் தலையாய பணியில் ஒன்றாகுமா?

இதோ, ஈங்கொருவன் இங்கிருக்கிறேன்! எந்தமிழரின் மானங் காக்கக் கொதித் தெழுவேன்! என்று கூட்டை உடைத்துக் கடுங்குரல் எழுப்பி வா! அரிமாவே! உன் கைகளைப் பிணைத்தாலும் எம் தமிழினத்தின் மீது ஆணையிட்டு, உன் எண்ணத் தீயால் எண்ணி, எண்ணியே சுட்டெரித்து விடு! சுட்டெரித்து விடு! வாழ்க பல்லாண்டு! வளர்க உன் தொண்டு!

**—சித்திரப் பொற்கொடி இறைக்குருவனார்.**

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

(பி.யு.சி.எல்.) எப்போதும் எதிர்த்து வந்துள்ளதை இங்குக் குறிப்பிட வேண்டும். 'தடா' சட்டம் முற்றிலும் மக்கள்நாயகத்திற்கு எதிரான கொடூரமான சட்டம் என்றும் உலகிலுள்ள வேறெந்த ஒரு குடியரசு நாட்டிலும் இதுபோன்ற சட்டம் காணக் கிடைக்காது என்றும் பி.யு.சி.எல். மீண்டும் உறுதிபடக் கூறுகிறது. பஞ்சாபில் வன்முறை நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காகவென முதலில் உருவாக்கப் பட்ட இச் சட்டம் இப்போது நாட்டின் பிறபகுதிகளில் வரைமுறையின்றி நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதற்கான ஒரே நோக்கம் மக்கள் நாயக அளவிலான எதிர்ப்புக் குரல்களை நசுக்குவதுதான். ம.உ.கூ(பி.யு.சி.எல்) பிற குடிஉரிமை அமைப்புகள் மாந்த உரிமைகளின்பால் அக்கறை கொண்டுள்ள தனி மாந்தர்கள் ஆகியோர் மீது 'தடா'வைப் பயன்படுத்துவது இந்தியத் தண்டனைச் சட்டம், இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (C.P.R.C.), இந்தியச் சாட்சி சட்டம் ஆகியனவற்றை நசைப்புக்குள்ளாக்குகிறது.

'தடா'ச் சட்டத்தை உடனடியாக நீக்கம் செய்து, அதன் கீழ் சிறை செய்யப்பட்டவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு பி.யு.சி.எல். கேட்டுக் கொள்கிறது.



Scanned with CamScanner

# இந்திய ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்தின் மேலாளுமையும், தமிழக ஒடுக்கப்பட்ட வகுப்பின் போர்த் தந்திரமும்!

க. கண்ணன். அறி. இ, கரடிப்பட்டி.

முன்னுரை: இக் கட்டுரையின் தலைப்பில் குறிக்கப்படுகின்ற 'ஆரியம்', 'பார்ப்பனியம்', 'முதலாளியம்', 'மேலாளுமை', 'ஒடுக்கப்பட்டோர்', 'பாட்டாளி வகுப்பு', 'போர்த் தந்திரம்' போன்ற வெவ்வேறு சொற்களுக்கும் குமுக ஆய்வாளர்கள், தனித் தனியான விளக்கங்களைக் கொடுக்கலாம். இந்தியாவிலுள்ள குமுக அமைப்பையும், அதன் வரலாற்றுப் போக்கையும் வெவ்வேறு கோணங்களில் ஆய்வு செய்த அறிஞர்கள் வெவ்வேறு விளக்கங்களை அளித்திருந்தாலும், இன்றைய ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்தின் மேலாளுமையை வீழ்த்துவதற்கு ஒடுக்கப்பட்ட பாட்டாளி வகுப்பின் போர்த் தந்திரம் எவ் வழியில் இருக்க வேண்டுமென்பதைத் தீர்மானமாகச் சிந்திக்க வேண்டிய காலக் கட்டத்தில் நாம் இருக்கின்றோம். இந்திய அரசியலில் உள் முரண்பாடுகள் கூர்மையடைந்து வருகின்ற இன்றைய காலக் கட்டத்தில் ஒடுக்கப்பட்ட பாட்டாளி வகுப்புச் சிந்தனையாளர்கள், வரலாற்றைத் தங்களுக்குச் சார்பாக ஆக்கிக் கொள்ள வேண்டும். குமுக ஒடுக்கு முறையிலும் பொருளியல் சுரண்டலிலும் முன் நிற்கின்ற பல பிரிவினர் தங்களுக்குள் இருக்கின்ற முரண்பாடுகளைப் பின்னுக்குத் தள்ளி விட்டு ஒன்றிணைவதைப் போல், இவர்களால் பாதிக்கப் படுகின்ற தாழ்த்தப்பட்டோர், பாட்டாளி வகுப்பினர், ஒடுக்கப்பட்ட தேசிய இன, மதப் பிரிவினர் ஏன் ஒன்றிணைய முடியாது? இவ் வொருங்கிணைப்பும் போராட்டமும் குமுக இயங்கியலுக்கு ஏற்றதாகவும், இயல்பான நடைமுறைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். அவ் வகையில் குமுகப் பொருளியல் அரசியல் நிலைகளில் ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்தின் மேலாளுமையையும், அதிலிருந்து விடுபட தமிழக ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய போராட்ட முறைகளையும் படிப்படியாக விளக்குவோம்.

## ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்தின் உயர் நிலை:

**'ஆரியம்'**—என்பது ஒரு நிறவெறிக் கொள்கை.

***பார்ப்பனியம்***—என்பது குமுகப் படிநிலை அமைப்பில் மேல்நிலைக் கொள்கை.

***முதலாளியம்***—என்பது பொருளியல் சுரண்டல் கொள்கை.

***ஒடுக்கப்பட்டோர்***—என்பது குறிப்பாக சாதிய அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களையே குறிக்கும்.

***பாட்டாளி வகுப்பினர்***—என்பது பல்வேறு தொழில்களில் உடல் உழைப்பில் ஈடுபட்டு பொருள்கள் உருவாக்கத்திலும் குமுகத்தின் மற்ற தேவைகளையும் நிறைவேற்றுகின்ற உழைக்கும் மக்களையே சிறப்பாகக் குறிக்கும்,

***போர்த் தந்திரம்***—என்பது ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலக் கட்டத்தில் ஒடுக்குகின்ற வகுப்பிற்கு எதிராக, ஒடுக்கப்படுகின்ற வகுப்புகள் சரியான வழியில் எடுக்கின்ற முகாமையான இறுதி முடிவாகும்.

இந்தியாவில் 'ஆரியர்' என்பவரோ, 'பார்ப்பனர்' என்பவரோ அல்லது 'முதலாளியர்' என்பவரோ மக்கள் தொகையில் மிக மிகச் சிறு தொகையினரே! ஆனால் 'ஒடுக்கப்பட்டோர்' என்பவர்கள் பல கோடிப்பேர், அவ்வாறே 'பாட்டாளி மக்களும்' பல கோடிப்பேர். பின் எப்படி இப்பெரும்பான்மையோர் மிகச் சிறுபான்மையருக்கு அடிமையாக இருக்கின்றனர்? பெரும்பான்மையாகவுள்ள நாம் ஒவ்வொருவருமே இங்குக் குறிக்கப் படுகின்ற 'ஆரியம்' 'பார்ப்பனியம்' 'முதலாளியம்' ஆகிய கொள்கையில் ஏதேனும் ஒன்றுக்கு அடிமையாக இருப்பதாலும், அவற்றைப் பின்பற்றுவதாலும் ஒடுக்கு முறையும் பொருளியல் சுரண்டலும் படிப்படியாக வளர்ந்து, இறுதியில் ஆரியப் பார்ப்பனிய முதலாளியமாக ஒன்றிணைந்து நம்மைத் தொடர்ந்து மேலாளுமை செய்கின்றது. ஆக ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்தின் உயர் நிலை ஆரியப் பார்ப்பனரிடமோ முதலாளிகளிடமோ மட்டும் இல்லை. ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்களின் ஒற்றுமையின்மையிலும், சரியான வழியில் எதிர்க்காத தன்மையிலும் இருக்கின்றது.

## ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்தின் சூழ்ச்சி:

இங்குக் குமுக நிலையிலும் பொருளியல் நிலையிலும் ஒரே தரத்திலுள்ள மக்கள் ஒன்றிணைய முடியாதபடிக்கு சாதிய ஏற்றத் தாழ்வுள்ள இந்து மதக் கருத்துகளை நாள்தோறும் பரப்பிக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறே பல்வேறு மொழித் தேசிய இனங்களும் தங்களுடைய சிக்கல்-



Scanned with CamScanner

களைத் தாங்களே தீர்த்துக் கொள்ள முடியாதபடிக்கு புதிய புதிய சிக்கல்களை உருவாக்கி ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டிருப்பதற்கான சூழ்ச்சிகளை ஆரியப் பார்ப்பனிய முதலாளிகள் கையாண்டு வருகின்றனர். மேலும் இங்கு ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்களுக்குக் குமுக ஒடுக்கு முறையும் பொருளியல் சுரண்டலும் எப்படி இணைந்து நடக்கின்றன என்பது தெரியாது. இங்குள்ள பெரும் முதலாளிகளே பத்தி வேடம் போட்டுக் கொண்டிருப்பதையும், மத நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதையும் காணலாம். பாட்டாளியச் சிந்தனையாளர்களும் இங்குப் பார்ப்பனிய முதலாளியச் சார்போடு இயங்குவதை நடைமுறையில் காணலாம். இங்குள்ள பல்வேறு மொழித் தேசிய இனமக்களின் மொழி, பண்பாடு, கலை, கல்வி, இறைக் கொள்கை ஆகிய அனைத்தும் ஆரியமயப்படுத்தப்பட்டு விட்டதால் அந்தந்த தேசிய இனத்திலுள்ள மேல் சாதியர் மற்றும் முதலாளிகள் தங்கள் வகுப்பு நலனுக்காக ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்தோடு இணைந்து இந்து மதத்திற்கும் இந்திய அரசுக்கும் உயிரூட்டுகின்றனர்.

## தேசிய இனங்களின் விடுதலையும் ஒடுக்கப்பட்ட பாட்டாளி வகுப்பின் போர்த் தந்திரமும்:

இன்று இந்தியாவில் தேசிய இன விடுதலையைப் பல்வேறு தேசிய இனங்கள் தங்கள் அரசியல் முதிர்ச்சி நிலைகளுக் கேற்பக் கொள்கை அளவிலோ செயல் அளவிலோ முன் வைத்துப் போராடி வருகின்றன. இக் கோரிக்கையை அத் தேசிய இனத்திலுள்ள இனவியல் சிந்தனையுள்ள ஒரு குழுவோ அல்லது பெரு முதலாளியத்தால் தாக்கமுறுகின்ற சிறு முதலாளிய வகுப்போ அல்லது குமுகப் பொருளியல் நிலைகளில் ஒடுக்கப்பட்ட பாட்டாளி வகுப்போ கூட முன் வைக்கலாம். ஒரு குமுக அமைப்பில் உள்ள பல்வேறு முரண்பாடுகளில் எது முதன்மையாக இருக்கின்றதோ, அதை நோக்கியே வெவ்வேறு வகுப்புகளின் சிந்தனையும் ஈர்க்கப்படும். குமுக மாற்றத்திற்கான இயங்கியல் தன்மை இதுவேயாகும். இப் போராட்டத்தில் தன்னுடைய தலைமையை, உறுதிப்படுத்துவதற்குரிய போர்த் தந்திரங்களையே ஒடுக்கப்பட்ட பாட்டாளி வகுப்பு கையாள வேண்டுமேயொழிய உலகப் பாட்டாளியப் புரட்சி என்றோ, இந்தியப் பாட்டாளியப் புரட்சி என்றோ அல்லது சாதிய, பொருளியல் சலுகை என்றோ வரலாற்றைத் தேக்க நிலையில் வைக்கவோ எதிர்த் திசையில் செலுத்தவோ கூடாது. இச் சூழ் நிலையை ஆரியப் பார்ப்பனிய முதலாளிகள் தெரிந்தே பல்வேறு இடக்கங்களில் இருந்து செயல்படுகின்றனர். ஆனால் ஒடுக்கப்பட்ட பாட்டாளியச் சிந்தனையாளர்கள் குமுக இயங்கியல் தன்மை விளங்காமல் இதைச் செய்கின்றனர். ஒவ்வொரு நாட்டின் ஒடுக்கப்பட்ட பாட்டாளி வகுப்பின் இறுதி நோக்கம் உலகப் பாட்டாளிய வகுப்பின் விடுதலையே என்றாலும், இ'து அந்தந்த நாட்டின் குமுகப் பொருளியல அரசியல் சூழலுக்கேற்ப முன்பின்னாக நடைபெற்று, இறுதியில் உலகப் பாட்டாளியம் மலரவேண்டும். இதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்லுமென்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாது. அதுவரை நாம் இயங்காவியல் சிந்தனையில் மூழ்கி இந்தியாவில் ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்திற்கும் உலக முதலாளியத்திற்கும் உயிரூட்டக் கூடாது. ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்களைத் தொடர்ந்து குமுக ஒடுக்கு முறையிலும் வறுமையிலும் ஆழ்த்தக் கூடாது.

இந்தியாவில் ஏற்கனவே தேசிய இனங்களின் விடுதலையை முன் வைத்த முதலாளிய இயக்கங்கள், இடையில் விட்டு விட்டு போலியான பாராளுமன்றச் சேற்றில் புதையுண்டு விட்டன. ஆகவே அடுத்து இவ் விடுதலைப் போராட்டங்களை ஒடுக்கப்பட்ட பாட்டாளி வகுப்புகளே முன்னெடுத்துச் செல்ல வேண்டும்; இது தங்களின் வகுப்பு உரிமைக்கான வரலாற்றுக் கடமையுங்கூட. இந்தியாவிலுள்ள பல்வேறு நாட்டினங்களின் விளை பொருள்களும் கனி வளங்களும் ஆரிய பார்ப்பனிய முதலாளியத்தால் உலக முதலாளியத்திற்கு முழுமையாக அடகு வைக்கப்படுவதற்கு முன் அல்லது ஒட்டச் சுரண்டப் படுவதற்கு முன் ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்கள் விழித்துக்கொள்வது நல்லது.

ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்களின் தலைமையிலான தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களே ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்தின் சங்கிலிப் பின்னலை உடைத்து அழிக்க முடியும். தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களைத் தீவிரப் படுத்துவது அரசியல் கோணத்தில் ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்தைத் தனிமைப் படுத்தி வலுவிழக்கச் செய்யும். பொருளியல் கோணத்தில் இங்குள்ள பெரும் முதலாளிகளும் உலக முதலாளிகளும் சுரண்டுவது தடுக்கப்படும்; அந்தந்த தேசிய இனங்கள் தன்னிறைவு பெறும். குமுகவியல கோணத்தில் ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்கள் பல்வேறு அக மற்றும் புற நிலைக் கட்டுபாடுகளிலிருந்து விடுதலை பெறுவர். தங்களின தலைமையை முன்னிலைப்படுத்தி உறுதிப்படுத்துவர். உலகப் பாட்டாளியச் சிந்தனைக்கும் விடுதலைக்கும் தங்களின் பங்கை ஆற்றி வலுச்சேர்ப்பர். இந்தியாவில் இரண்டாயிரமாண்டுக் காலத்தேக்க நிலை உடைக்கப்பட்டு உலகிற்கே புதிய சிந்தனையை வழங்குவர். தாய்மை உணர்வோடும் தமிழ் வீரத்தோடும தமிழகப் பாட்டாளி மக்களே இதற்கு முன் வர வேண்டும்.

O

# தென் கடலிற் தீக்குளித்த தமிழ் வீரர் வாழ்க!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

நம் தமிழ் நாட்டின் கடற்பகுதிகளில் எத்துணையோ வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் நாட்டின் வணிகக் கப்பல்களும், அக்கால "யவனர்" என்றழைக்கப்பட்ட ஐரோப்பியரின் வணிகக் கப்பல்களும் தமிழ் நாட்டு முத்துக்கள், மயிற்பீலிகள், மிளகுகள், இன்னபிற வணிகப் பொருள்களைத் தமிழ் நாட்டுத் துறைமுகங்களிலிருந்து ஏற்றி ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றன. அதே போல், இக்கப்பல்கள் ஐரோப்பாவிருந்து கொண்டுவரும் சரக்குகளைத் தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் இறக்கின

தமிழர் தம் வணிகத்திறனை மட்டுமல்ல, வீரத் திறனையும் தமிழ் நாட்டுக் கடற்பகுதிகள் கண்டுள்ளன. ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், சோழப் பேரரசன் இராசஇராசனின் போர்க்கப்பல்கள் தமிழ் நாட்டுக் கடற்பகுதிகளிலிருந்து புறப்பட்டு இலங்கைத் தீவுக்குச் சென்று, தமிழ்நாட்டு அரசியலில் தலையிட்ட சிங்களவ மன்னன் ஐந்தாம் மகிந்தனின் படையைத் தோற்கடித்தன. சில ஆண்டுகளுக்குப் பின்னால், இராசராசனின் மகன் இராசேந்திர சோழப் பேரரசனின் கடற்படை தமிழ்நாட்டுக் கடற்பகுதிகளிலிருந்து புறப்பட்டுக் கடாரம் வரை சென்று அப்பகுதி மன்னர்களையெல்லாம் வென்று வாகை சூடியது. (கடாரம் என்பது இன்றைய மலேயா மற்றும் பர்மா நாட்டுப் பகுதிகளைக் கொண்டது என்பர் வரலாற்றாசிரியர்கள்.)

இவ்வாறு தமிழர் தம் வீரச் செயல்கள் பலவற்றைக் கண்டுள்ள தமிழ்நாட்டுக் கடற்பகுதி அண்மையிலே வரலாற்றுச் சிறப்பு மிக்க வீரச் செயலொன்றை மீண்டும் கண்டுள்ளது. ஆண்டு 1993, சனவரித் திங்கள் 16 ஆம் நாள், தமிழ் ஈழ மக்களின் ஒரே காவற்படையாம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கப்பலொன்று ஈழத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. (இக் கப்பல் இந்தியாவிலிருந்து புறப்படவில்லை. இந்தியாவை நோக்கி வரவுமில்லை. வேறெந்த நாட்டிலோவிருந்து புறப்பட்டு ஈழத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.) தன்னந்தனியாகச் சென்று கொண்டிருந்த அந்தச் சிறிய கப்பலை, இந்தியக் கடற்படையின் பெரிய கப்பல்கள் சில சுற்றி வளைத்துக் கொண்டு அக்கப்பலிலிருந்த விடுதலைப் புலிகளைக் கைது படுத்த முயன்றன. இந்தியக் கடற்படையால் கைது படுத்தப் படுவாரேயாகில், விடுதலைப் புலிகள் பலவாறாக உறுப்புச் சிதைவுகள் (சித்திரவதைகள்) செய்யப்பட்டு, விடுதலைப் புலிகளின் படையாற்றல் குறித்த கமுக்கங்களை (இரகசியங்களை) இந்திய அரசுக்கும், அதன் வழி சிங்களவப் படைக்கும் வெளியாக்கும் நிலை ஏற்பட்டது. அதனால், தமிழ் ஈழமக்களின்—அவர்களைக் காத்து நிற்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின்—நலனைக் கருதி, அக் கப்பலிலிருந்த விடுதலைப் புலிகள் பதின்மர்—குறிப்பாக, தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் படையாற்றல் பற்றிய கமுக்கங்களை அறிந்த பதின்மர்—அக்கப்பலைத் தீக்கிரையாக்கி, அத்துடன் தம் உயிரையும், உடலையும் அத் தீயிலேயே மாய்த்துக் கொண்டனர்.

இவ் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை மேனாட்டுத் தாளிகைகள் சில விளக்கமாக வெளியிட்டிருக்கின்றன. அச் சேதியை நான் படித்த போது, அவ் வீரப் பெருமக்களைத் தமிழ் ஈழம் இழந்து விட்டதே என்ற நினைப்பிலே எழுந்த கண்ணீர் ஒரு புறம், இத்தகைய வீர நெஞ்சங்களை பத்துத் தமிழ்த் தாய்மார் பெற்றெடுத்திருக்கிறார்களே, இத்தகைய வீரமறவர்களைப் பத்துத் தமிழ்த் தந்தையர் வளர்த்தெடுத்திருக்கிறார்களே என்ற நினைப்பிலே எழுந்த பெருமித உணர்வு மற்றொரு புறம்.

"ஈன்று புறந்தருதல் தாய்க்குக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
ஒளிறு வாளருஞ்சமம் முறுக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்ற புறநானூற்றுப் பாடல் என் நினைவுக்கு வந்தது. (இன்று தமிழ்க் காளையர் மட்டுமல்ல, தமிழ்க் கன்னியரும் கூட களிறெறிந்து பெயர்கிறார்கள்" ஈழத்துப் போர்க்களங்களிலே!) *புறநானூறு பாடிய தமிழர் மறம்* இன்றும் தமிழரிடையே நிலைத்து நிற்பது கண்டு பெருமிதம் கொண்டேன். இவ்வாறாக இம் மாவீரரின் மறைவு குறித்த துயரம் ஒரு புறம், இம் மாவீரர் விளைத்த வீரம் குறித்த பெருமை மறுபுறம்.

வாழும் போதும் தமிழ் ஈழ மக்களுக்காகவே வாழ்ந்து, வீழும் போதும் தமிழ் ஈழ மக்களுக்காகவே வீழ்ந்து பட்ட இத்தகைய பெரு வீரர்களாலேயே தமிழீழம் விடுதலை பெற்று வையத்து நாடுகளிலே ஒரு நாடாய் வாழ்ந்து விடும். இப்பதின்மர் மட்டுமல்ல போர்க்களத்தே விழுப்புண்பட்டு உயிர் நீத்தாரும், மாற்றான் கைப்படாதிருக்க நஞ்சுண்டு உயிர் நீத்தாருமாக தமிழ் மறவர்—மறத்தியர் சிலவாயிரம் பேருண்டு, இம் மாவீர—வீராங்கனையரே ஈழ விடுதலையைத் தூக்கி நிறுத்தும் தூண்கள்.



Scanned with CamScanner

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் செய்திடும் வீரச் செயல்களையும், ஈகச் செயல்களையும் யாரும் குறைவாக மதிப்பிட்டு விடக் கூடாது. சில ஆண்டுகளுக்கு முன்னால் (1987 முதல் 1989 வரையிலும்), இலங்கைத் தீவின் சிங்களவப் பகுதிகளில் (தெற்குப் பகுதிகளில்) செ.வி.பி. (J.V.P.) என்றழைக்கப்பட்ட சனதா விமுக்தி பெரமுனை (Janatha Vimukti Peramuna) எனும் சிங்களவப் புரட்சிக் குழுவொன்று இலங்கையரசை எதிர்த்துப் போரிட்டதை நாம் அறிவோம். இன்று அது இருந்த இடமே தெரியவில்லையே, ஏன்? செ.வி.பி.யின் தலைவர்களின் ஈக உணர்வின்மையும், வீர உணர்வின்மையுமே அப்புரட்சிக்குழுவின் வீழச்சிக்கு அழிவுக்குக்—காரணமாயிற்று. 1989-இல் செ வி.பி.யின் ஆட்சிக் குழு (Politbureau) உறுப்பினர் சிலர் இலங்கையரசால் தளை செய்யப் பட்டனர். அவர்களை உசாவல் (விசாரணை) செய்த போது, அவர்கள் செ.வி.பி.யின் தலைவரான உரோகன விசெவீரா (Rohana Wijeweera) எங்கே தங்கியிருக்கிறார் என்பதை இலங்கையரசின் காவற்படைக்குத் தெரிவித்து விட்டார்கள். 1989 நவம்பர் திங்களில் இலங்கையரசு உரோகன விசெவீரா தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று அவரைத் தளை செய்தது; அவரை உசாவல் (விசாரணை) செய்த போது, அவர் பிற தலைவர்களின் இருப்பிடங்கள் மற்றும் படைக் கருவிகளை மறைத்து வைத்திருக்கும் இடங்களை இலங்கையரசுக்குத் தெரிவித்து விட்டார். செ.வி பி.யின் துணைத் தலைவராகக் கருதப்பட்ட உபதிச கமனயெகா (Upatissa Gamanayeka) எங்கே தங்கியிருக்கிறார் என்பதையும் கூறிவிட்டார். உடனடியாக இலங்கையரசின் காவற்படை அங்கே சென்று கமனயெகாவைச் சுட்டுக் கொன்றது. உரோகன விசெவீரா, தாம் செ.வி.பி.யின் தலைவர்களின் இருப்பிடங்களையும், படைக்கருவிகளை மறைத்து வைத்திருக்கும் இடங்களையும் தெரிவித்து விட்டதால், தனக்குக் கொலைத் தண்டனைத் தர மாட்டார்கள் என்று நினைத்திருக்கலாம். ஆனால், அவரிடமிருந்து தெரிந்து கொள்ளடிய கமுக்கங்களையெல்லாம் (இரகசியங்களையெல்லாம்) தெரிந்து கொண்டபின், இலங்கையரசின் காவற்படை அவரைச் சுட்டுக் கொன்றது. பின்னர், அவரிடமிருந்து தெரிந்து கொண்ட கமுக்கங்களின் மூலம், செ.வி.பி.யின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர் பெரும்பான்மையோரைக் கண்டு பிடித்துச் சிறையிலடைத்தது அல்லது கொன்றது. அவர்கள் மறைத்து வைத்திருந்த படைக் கருவிகளைக் கைப்பற்றியது. இன்று செ.வி.பி. இருந்த இடமே தெரியவில்லை. முற்றிலுமாகச் சீரழிந்து சிதறிப் போய்விட்டது.

செ.வி.பியைப் போல அழித்தொழிக்கப் படாமல், பல ஆண்டுகளாகத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் முதலில் சிங்களவப் படையையும், பின்னர், இரண்டரையாண்டு காலமாக இந்தியப் படையையும், இன்று மீண்டும் சிங்களவப் படையையும் எதிர்த்துப் போரிட்டு, ஈழத்தின் கிழக்குப் பகுதியில் சிங்களவப் படைக்கு இழிவுகள் விளைத்தும், ஈழத்தின் வடபகுதியின் பெரும் பகுதி இன்றும் சிங்களவரின் கைக்கு வீழாமல் காத்தும் நிற்கிறார்கள் என்றால் (தமிழ் ஈழத்தின் வடபகுதி சிங்களப் படையின் கைக்ககப்படாமல் காத்து நிற்பது எளிதான செயலன்று, மிக அரிதான செயல் என்பது பல படைத் திறனாளரின் (Military Experts) கருத்து), அதற்குக் காரணம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் வீரமும், கொள்கைப் பிடிப்பும், நாட்டுப் பற்றும், இன உணர்வும், போர்த்திறனும், ஈக நெஞ்சமுமேயாகும். இத்தகைய பெறற்கரிய பெரு **வீரர்களைப் பொன்போல போற்றிப் பாதுகாக்க வேண்டியது** தமிழர் தம் கடனாகும். தமிழ் ஈழ விடுதலைக்காக எல்லா வகையிலும் துணைநிற்க வேண்டியது தமிழர் தம் கடனாகும்

தமிழ் நாட்டுக் கடற்பகுதியிலே, 1993 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 16-ஆம் நாளிலே தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் பதின்மர் தம்மைத் தாமே தீக்கிரையாக்கித் தம் சாம்பலைத் தமிழ்க் கடலிலே கரைத்துக் கொண்ட வீரச் செயல் ஊழிகாலம் வரைக்கும் தமிழினத்தால் போராடப்படும் பெருஞ் செயலாகும்; இதுவே **வீரத்தின் உச்சம்! ஈகத்தின் கொடுமுடி (சிகரம்)!**

தென் கடலிற் தீக்குளித்த தமிழ்வீரர் வாழ்க!
தமிழ் ஈழம் விடுதலை பெறுக! O

தமிழ்நிலம்
அருணாச்சலத் தெரு, சென்னை-5

பெறுநர்

நூல்-அஞ்சல்

TN/MS (C)657